02.10.2019

# செய்தி வெளியீடு

**ஜனவரி 2019 முதல் செப்டம்பர் 2019 வரை 2.23 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர். செப்டம்பர் 2019 மாதத்தில் மட்டும் சுமார் 32 லட்சம் பயணிகள் பயணம் செய்துள்ளனர்.**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தொடங்கியது முதல் சென்னை மக்களுக்கு பல்வேறு வசதிகளுடன் பாதுகாப்பான மற்றும் நிலையான போக்குவரத்து சேவையை வழங்கி வருகிறது . செப்டம்பர் 2019 மாதத்தில் மட்டும், மெட்ரோ இரயிலில் மொத்தம் 31,89,591 பயணிகள் பயணம் செய்துள்ளனர். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பயணிகள் குறுகிய நேரத்தில் தங்களது சேருமிடத்தை சென்று சேர்ந்திட பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த செப்டம்பர் மாதத்தில் மொத்தம் 21 நாட்கள் தலா1 லட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் மெட்ரோ இரயிலில் பயணம் செய்துள்ளனர். மேலும் 13-09-2019 ஆம் தேதியில் 1,19,888 பயணிகளும், 06-09-2019 ஆம் தேதியில் 1,16,575 பயணிகளும், 12-09-2019 அன்று 1,16,347 பயணிகளும் , 16-09-2019 அன்று 1,15,329 பயணிகளும் 02-09-2019அன்று 1,14,240 பயணிகளும், 30-09-2019 அன்று 1,14,123 பயணிகளும் பயணம் செய்துள்ளனர். மேலும் 07.09.2019 சனிக்கிழமை அன்று 1,01,430 நபர்கள் பயணித்து உள்ளனர்.

ஜனவரி 2019 முதல் செப்டம்பர் 2019 வரை மொத்தம் 2.23 கோடி பயணிகள் பயணம் செய்துள்ளனர். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பல்வேறு இணைப்பு சேவைகள் வழங்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மெட்ரோ இரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ , ஷேர் டாக்ஸி மற்றும் மெட்ரோ சீருந்து சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் மாநகர போக்குவரத்துக் கழகம் மூலம் சிறிய பேருந்து சேவைகளும் ஓ.எம்.ஆரில் உள்ள ஐ.டி வழித்தடங்களில் டெம்போ வாகன வசதி யும் பயணிகளின் நலனுக்காக செய்யப்பட்டுள்ளன.